## வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் - 2017

வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 ஆகஸ்ட் 27 ஆம் திகதிய 2639– எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. தேசிய மட்டத்தில் செயற்திட்ட நடவடிக்கைகளை முகாமை செய்து ஒருங்கிணைப்பதற்குப் பொறுப்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை உள்ளது. வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களின் 170 கிலோமீற்றர்கள் நீளமான தேசிய வீதிகளை புனரமைத்து முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் ஆரம்ப மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 16,790 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 146 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 14,950 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 130 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டிருந்தது. மேலும், ஆசிய அபிவிருத்தி வங்கியானது வட மாகாணம் மற்றும் வட மத்திய மாகாணங்களின் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைகளிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 4,420 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 34 மில்லியனில் 2013 மே 31 இன் 2890 எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) ஆம் இலக்க மேலதிக நிதியளித்தல் கடன் உடன்படிக்கையின் கீழ் ரூபா 8,840 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 68 மில்லியனை வழங்குவதற்கு இணங்கியிருந்தது. இதற்கு மேலதிகமாக வட மற்றும் வடமத்திய மாகாணங்களிலுள்ள தேசிய வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகளிற்காக 2013 மே 31 இன் 2891 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் ரூபா 3,900 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 30 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆரம்ப கடன் உடன்படிக்கையின் கீழ் செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2010 ஒக்தோபர் 22 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. மேலதிக நிதியளிப்பு ஒழுங்குகளின் கீழான செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2013 மே 13 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள

தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட முன்னேற்றப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளிற்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கட்டுநிதிக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் கீழான சிவில் வேலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 21.57

மில்லியன் தொகையான அத்தகைய வேலைகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் நடைமுறை வேலையாக தொடர்ந்து காட்டப்பட்டிருந்தது.

(ஆ) வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றப்பட்ட ரூபா 276.33 மில்லியன் தொகையான மோட்டார் வாகனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 284 மில்லியனாக பிழையாக காட்டப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டு மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகைகள் | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 2017 ஆம் ஆண்டின் போது | 2017 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | | | | | | |
| - 2639 | 130 | 14,950 | 86.00 | 81.56 | 127.28 | 16,103.77 |
| - 2890 | 34 | 4,420 | 450.00 | 409.70 | 28.19 | 3,911.74 |
| - 2891 | 30 | 3,900 | - | 246.83 | 22.69 | 3,077.27 |
| இலங்கை அரசாங்கம் | - | 2,080 | 25.30 | 10.92 | 0.58 | 74.95 |
| **மொத்தம்** | **194** | **25,350** | **561.30** | **749.01** | **178.74** | **23,167.73** |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், 03 புனரமைக்கப்பட்ட தேசிய வீதிகளின் பராமரிப்பு வேலைகளை அடிப்படையாகக் கொண்ட 03 ஆண்டு செயலாற்றல் உள்ளடங்கலாக 10 பொதிகளின் கீழ் 170 கிலோமீற்றர்கள் நீளமான வட மற்றும் வடமத்திய மாகாணங்களிலுள்ள 10 தேசிய வீதிகளின் புனரமைப்பு வேலைகள் 2015 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. மேலும், ஆரம்ப அமுல்ப்படுத்தல் திட்டம் மற்றும் மேலதிக நிதி ஒழுங்குகளின் கீழ் வட மற்றும் வடமத்திய மாகாணங்களிலுள்ள வீதிகளின் புனரமைப்பு மீதான சேமிப்புக்களை பயன்படுத்தி 2015 இல் வழங்கப்பட்ட ஏனைய 02 தேசிய வீதிகளின் புனரமைப்பிற்கான வேலை ஒப்பந்தங்கள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, 9.64 கிலோமீற்றர்கள் நீளமான றம்பேவா தொடக்கம் மதவாச்சி வரையான கண்டி – யாழ்ப்பாண வீதிப் பிரிவை புனரமைப்பதற்கு 2017 ஏப்ரல் 28 இல் புதிய ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தத்தின் பௌதீக முன்னேற்றம் 49 சதவீதத்தில் காணப்பட்டது.

**3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புனரமைப்பிற்காக வழங்கப்பட்ட ஒப்பந்தத்திற்கு மேலதிகமாக செயற்திட்டத்தால் புனரமைக்கப்பட்ட 22 தேசிய வீதிகளில் 20 தேசிய வீதிகளைப் பராமரிப்பதற்கு ரூபா 232.19 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. 03 ஆண்டு காலப்பகுதிக்காக 11 தேசிய வீதிகள் மற்றும் 05 ஆண்டு காலப்பகுதிக்காக 09 ஏனைய தேசிய வீதிகள் என்பவற்றை பராமரிப்பதற்கான ஒப்பந்தம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டக் காலப்பகுதி பூர்த்தியடையும் விடயத்தை கருத்திற்கொள்ளாமல் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், ஒட்டுசுட்டான், முள்ளிவாய்க்கால் மற்றும் மடு சந்தியில் ரூபா 90.1 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தால் நிர்மாணிக்கப்பட்ட அலுவலகக்கட்டிடங்கள் மற்றும் பதவியணியினர் விடுதிகள் என்பன 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், மாற்றப்பட்ட திகதிகள் மற்றும் அத்தகைய ஆதனங்களை பொறுப்பேற்ற தரப்பினர்கள் போன்றன தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்காததனால் உரிய நோக்கங்களிற்கான அவ் ஆதனங்களின் உள்ளதன்மை மற்றும் பயன்பாடு என்பன கணக்காய்வால் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

செயற்திட்டத்தின் வீதிப் புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ள ஒப்பந்ததாரர்கள் அவர்களின் நடவடிக்கைகளிற்குப் பயன்படுத்துவதற்காக நேரடியாக மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது ஆகையால், 2013 தொடக்கம் 2016 வரை ரூபா 284 மில்லியன் கிரயத்தில் கொள்வனவுசெய்யப்பட்ட 37 மோட்டார் வாகனங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் ரூபா 89.6 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஏனைய 10 மோட்டார் வாகனங்கள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டக் கண்காணிப்புப் பிரிவில் காணப்பட்டன. அவற்றின் மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்குறிப்பிடப்பட்ட 10 மோட்டார் வாகனங்களிற்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் போது 02 மோட்டார் வாகனங்களை வாடகைக்கு பெறுவதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருந்தது. குத்தகை உடன்படிக்கைகளின் பிரகாரம், மோட்டார் வாகனமொன்றிற்கு மாதமொன்றிற்கு ஆகக்கூடிய எல்லையான 2500 கிலோமீற்றர்கள் ஓடப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்பட்டிருந்தது. 17,316 கிலோமீற்றர்கள் பற்றாக்குறையுடன் 59,484 கிலோமீற்றர்கள் ஓடியமை தொடர்பில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் ரூபா 3.66 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மேலும், 2017 ஏப்ரல் 24 இல் ரூபா 14.05 மில்லியன் கிரயத்தில் வேறொரு மோட்டார் வாகனத்தை கொள்வனவு செய்வதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டக் காலப்பகுதி முடிவுறுத்தப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தமையால் புதிய மோட்டார் வாகனத்தின் தேவைப்பாடானது கணக்காய்வில் தீர்மானிக்கப்பட முடியாதிருந்தது.

**3.5 செயற்திட்டத்தின் வழமைக்கு மாறான நடவடிக்கைகள்**

அச்சு இயந்திரம் மற்றும் ஏனைய துணைக் கருவிகள் என்பன வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பாவனைக்காக ரூபா 2.89 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவை செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைவதுடன் நேரடியாக தொடர்புபட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.